விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 23 | ஜ- அவ் 14 | இதழ் 352
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 5 2 1985

ஆஸ்பத்திரிக்கு

## கர்ப்பிணியை கொண்டுசென்ற கார் சாரதி சுடப்பட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வசிக்கும்' இந்திய வம்சாவழிக் குடும்பமொன்று, கர்ப்பிணிப் பெண் ஒருவரையாழ். ஆஸ்பத்திரிக்கு காரில் கொண்டு சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு கார் சாரதி பலியானர். மலைநாட்டைச்சேர்ந்த இளம் கர்ப்பிணிப் பெண்ணும், அவரது கணவரும், சகோதரனும் படுகாயமடைந்தனர்.

யாழ். பஸ் நிலையத்திற்கு எதிரில் ஆஸ்பத்திரிக்கு அருகில் நேற்று அதிகாலை 4 மணிக்கு இச்சம்பவம் நடந்தது.

கார் சாரதி நாராயணசாமி இராமசாமி (68 வயது) ஸ்தலத்தில் பலியானர், கர்ப்பிணி பெண்ணை விஜயலட்சுமி (21 வயது), ஜெகதீசன் மணியம் [28 வயது], சுப்பையா சண்முகம் [34 வயது] படுகாயமடைந்தனர்.

காரின் சாரதிக்கு அருகில் சண்முகமும், அவருக்கருகில் பெரிய வெள்ளைக் கொடிபிடித்தபடி மணியமும் இருந்ததாகவும், பின் ஆசனத்தில் மரியதாசும், மரியாயியும் விஜயலெட்சுமியும் இருந்ததாகவும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டதும் சார் முன்கண்ணுடி உடைந்ததுடன் கார் நின்றுவிட்டதாகவும் தொடர்ந்து வெடிச்சத்

(6ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க]

முல்லைத்தீவு முகாம்களில்

# அகதிகள் பலருக்கு வயிற்றோட்ட நோய்!

## மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் பலி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அகதி முகாம்களில் வயிற்றோட்டநோய் கடுமையாகப் பாதித்துள்ளது. தற்பொழுது 25 பேர் இதனுல் பாதிக்கப்பட்டுள்ளனர். கடுமையாகப் பாதிக்கப்பட்ட மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமாகியுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 8 பேர் பலியாகியுள்ளனர்.

இதுவரை முல்லைத்தீவு அகதிமுகாம்களில் 450 பேருக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து 5 மைல்களுக்கு அப்பால் உள்ள நீராவிபிட்டியில் கடந்த டிசம்பர் மாதம் 21ம் தேதி 7 குழந்தைகளும், வயோதிபரும், வயிற்றோட்டத்திற்கு பலியானர்கள். இதுபற்றி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன், சுகாதார பிரிவு டாக்டர் றெட்றிக்கோவின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதனை தொடர்ந்து சுகாதா பகுதியினர் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

### 1750 கைதிகள் விடுதலை

[கொழும்பு]

இலங்கையின் 37-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 1750 சிறைக் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது.

மரணதண்டனை வழங்கப்பட்டிருந்த 66 பேருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனையாக அத்தண்டனை மாற்றப்பட்டது நீதியமைச்சின் சிபார்சின் பேரிலேயே ஜனதிபதி இத்தண்டனைக்குறைப்பை வழங்கினர். (கி)

## மட்டக்களப்பில் 20 கைதிகள் விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் அரச ஊழியர்களும், பிரமுகர்களும் கலந்துகொண்டனர். அரசாங்க அதிபர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

கடைகள்யாவும் மூடப்பட்டிருந்தன இ. போ. ச. பஸ்களைத்தவிர வேறு வாகனங்கள் ஓடவில்லை.

நேற்று முன்தினமிரவு 7-45 மணியளவில் மட்டக்களப்பில் குண்டுவெடிப்புச் சத்தம்ஒன்று கேட்டது.

[6-ம் பக்கம் 3ம்-கலம் பார்க்க]

சுதந்திர தினம்:

## யாழ்ப்பாணத்திலிருந்துவந்த இராணுவஅணிக்கு முதலிடம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிவிட்டு அண்மையில் கொழும்பு திரும்பியிருந்த இராணுவ அணியொன்றுக்கே இத்தடவை சுதந்திரதினவிழாவில் முக்கியமளிக்கப்பட்டிருந்தது.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் இலங்கையின் 37வது சுதந்திரதின வைபவம் நேற்று கொண்டாடப்பட்டது. இத்தடவை வழமைபோல் இராணுவ அணிவகுப்பு, விமான, கடற்படை அணிவகுப்புகள் பெருமளவில் இடம்பெறவில்லை. ஆனுலும் சம்பிரதாயத்தைப் பேணும் வகையில் ஒரேயொரு இராணுவப் பிரி

(6-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க)

## திருமலையில் பஸ் தீக்கிரை

[திருகோணமலை]

திருகோணமலையில் குச்சவெளி 8-ம் கட்டையடியில் இ போ ச. பஸ்ஒன்று எரிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகளுடன்வந்த இப்பஸ்ஸை தீவிரவாதிகள் சிலர் மறித்து பிரயாணிகளை இறக்கிவிட்டு தீயிட்டதாகக் கூறப்படுகிறது திருகோணமலையில் அரச திணைக்களங்களிலும், கடைகளிலும் நேற்று தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வீடுகளில் பெரும்பாலும் தேசியக்கொடிகள் காணப்படவில்லை.

யாழ். அரச செயலகத்தில்

## ஆடம்பரமின்றி நடந்த சுதந்திரதின விழா

[யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க செயலகத்தில், மிக சுருக்கமான முறையில் நேற்றுக்காலை 8-10 மணிக்கு தேசியக் கொடியும் யாழ் மாவட்ட கொடியும் ஏற்றிவைக்கப்பட்டன.

யாழ். நகரில் நேற்று வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. ஒரு சில இ. போ. ச பஸ்கள் சேவையில் ஈடுபட்ட போதிலும் பிரயாணிகள் காணப்படவில்லை வீதிகளில் வேறுவாகனங்களோ சயிக்கிள்களோ அதிகம் காணப்படவில்லை எங்கும் அமைதி நிலவியது. (க)

### பாலம் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாற்றுக்கும் அச்சுவேலிக்கும் இடையிலான பாலம் ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

தொண்டமனாறுக்கும் மைலிட்டிக்குமிடையிலான வீதியும் ஓரிடத்தில். குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

### யாழ். ரயில் நிலையத்திலும் கொடி அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்தும் நேற்று 'தேசியக்கொடி' இனந்தெரியாதவர்களால் கழற்றிச் செல்லப்பட்டது.

(6-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற

## இந்தியஅரசு நேரடியாகத் தலையிட வேண்டும்!

### திருச்சி கூட்டத்தில் கோரிக்கை

சென்னை, பெப் 4

''இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அந்நாட்டில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்துநிறுத்தி, இலங்கைத் தமிழர்களைக் காக்கும் வகையில் இந்தியமத்திய அரசு உடனடியாக நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

இவ்வாறு இந்திய மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று திருச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பன்னுட்டு தமிழ்உறவு மன்றத்தின் உலகளாவிய முதல் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம் மகாநாட்டில் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த முக்கிய தமிழ்த் தலைவர்கள்பலர் கலந்துகொண்டு. உரையாற்றினர்கள். டாக்டர் தமிழ்க்குடிமகன் தலைமையில் இம் மகாநாடு நடைபெற்றது.

### பூஸா இளைஞர்கள்

## 7-ம் திகதி மாலை 4 மணிக்கு யாழ். வந்துசேர்வர்!

[யாழ்ப்பாணம்]

'பூஸா' முகாமிலிருந்து விடுதலை பெற்றவர்கள் இம்மாதம் 7-ம் தேதி பிற்பகல் 4 மணிக்கு யாழ். பஸ்நிலையத்தை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேராதனை தமிழ் மாணவர்களுடன் செல்லும் பொதுசன தொடர்பு அதிகாரி திரு. சண்முகசுந்தரம், இம்மாதம் 6-ம் தேதி பேராதனை சென்றடைந்தபின் மறுநாள். 7-ம் தேதி அதேபஸ்ஸில் அனுராதபுரத்திலிருந்து 'பூஸா' வில் விடுதலையானவர்களை கூட்டிவர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

### வர்த்தகரின் மகனும் விடுதலை

[புலோலி]

வல்வெட்டித்துறையில் இனந்தெரியாத கோஷ்டியினுல் கடத்தப்பட்டு விடுவிக்கப்படாமல் இருந்த பிரபல வர்த்தகர் விஷ்ணுசுந்தரத்தின் மகன் அருட்செலவமும்விடுவிக்கப்பட்டுள்ளார்.

## "தமிழரைப் பூண்டோடு அழிக்க திட்டம்"

### அமிர் குற்றச்சாட்டு

சென்னை, பெப் 4

''தமிழ் இனத்தைப் பூண்டோடு ஒழிக்க இலங்கை அரசு எல்லாச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துகிறது''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் திருச்சியில் நடைபெற்ற உலகளாவிய பன்னுட்டு தமிழ் உறவு மன்றத்தின் முதலாவது மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினர்.

திரு அமிர்தலிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

''இலங்கைத் தமிழர் பிரச்னையைத்தீர்க்க இனிப் பேச்சுவார்த்தைகளுக்கு இலங்கை அரசு கட்டுப்படாது'' என்று கூறினர்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

L 300 டெலிக்கா Van 82 Model Brand New ஆகஇறக்கு மதி செய்யப்பட்டது. 27,000 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடியது. திரு. N. ஸ்ரீராம், அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை அல்லது திரு. S. செல்வேந்திரா, 42, K. K. S. றோட், யாழ்ப்பாணம், 1659

இராச வீதியில், தாவடியில், நிலாவரையில் மூன்று காணிகள் தொழிற்சாலை அமைக்க உகந்தது தொடர்புகொள்க. 171A பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22562 1661

நவாலி வடக்கில் வீடுகட்டக்கூடிய ஒன்பது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- வி. பூபதிராஜா, சிறுப்பர் வீடு, நவாலி வடக்கு, மானிப்பாய். 1679

சுன்னுகம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் மின்சாரம் - கிணறு - மலசலகூடத்துடன், புதிய வீடும் காணியும் விற்பனைக்குண்டு. P. விக்டர், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம். 1686

ஒறிஜினல் ஹைடில்பேக் சிலின்டர் (Heidel Berg) அச்சுயந்திரம் (50×77 Cm-22''x30½'') விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு:- 35, சப்பல்வீதி, யாழ்ப்பாணம். 1678

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் நாவலர் வீதியில் நல்ல சுற்றுடலில் வீடுகட்டக்கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. ஸ்ரீபதி, சட்டத்தரணி, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1688)

நல்ல இன, ஆறு கிழமை உடைய பூச்சி அகற்றிய கறுப்பு வெள்ளை, கறுப்பு மண்ணிற அல்சேஷன் (Alsation) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. —ந. அரியரத்தினம், மார்க்கட் றோட், (பேக்கரி முன்பாக), கொக்குவில். 1690

## வாடகைக்கு

ஆனைக்கோட்டை பாடசாலை ஒழுங்கையிலும், பொன்னையா ஒழுங்கையிலும் வீடுகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- S. நல்லையா, ''வெண்மதி'' ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 1684

## 9-இல் இறுதிப் பரீட்சை

(கல்வியங்காடு)

ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு நெறிகளைக் கடந்த ஆறு மாதகாலமாக யாழ். மாவட்டத்தில் உள்ள ஏழு கல்லூரிகளில் கற்று, பயிற்சியை முடித்துக்கொள்ளவுள்ளமாணவர்களுக்கான இறுதிக் கல்வித் தகைமைப் பரீட்சை இம்மாதம் 9-ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தினரால நடத்தப்படும்.

இந்நெறிகள் கல்லூரிகளை விட்டு வெளியேறிய பழைய மாணவர்களின் நன்மை கருதி யாழ் கல்வித் திணைக்களத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த பயிற்சி நெறி மிகவிரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சம்பள உயர்வு கிடைத்தது

[கொழும்புத்துறை]

அச்சுவேலிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரசாங்கத்திஞல் அறிவிக்கப்பட்டு, வழங்கப்படாதிருந்த இரு சம்பள உயர்வுகளையும் ஊழியர்களுக்கு இம்மாதத்திலிருந்து வழங்கியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருள் விநியோகத்தில் ஊழியர்களை ஊக்குவிக்கும் முகமாக ஊக்குவிப்பு போனஸும் வழங்கப்பட்டுள்ளது.

## பனந்தும்பு தொழிற்சாலை

(கொழும்புத்துறை)

இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் பூநகரியில் பனந்தும்புத் தொழிற்சாலையொன்று இம்மாத இறுதிக்குள் திறந்து வைக்கப்படவுள்ளது.

## சாவகச்சேரி நீதிமன்ற அலுவலகம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நீதிமன்றம் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து, சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற அலுவலகம், நீதவானின் பழைய வாசஸ்தலத்தில் 28-ம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஏராளமான ஜீவனும்ச வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட, நீதவான் நீதிமன்ற விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு வதந்தியும் அடிபட்டது. ஆனல் ஆனையிறவு, செம்பியன்பற்று, பச்சிலைப்பள்ளி, சாவாச்சேரி, கொடிகாமம் பகுதி மக்கள், நாவற்குழியிலுள்ள தடைமுகாமையொட்டி வழக்குவிசாரணைக்கு யாழ்ப்பாணம் செல்வதற்கு அச்சம் தெரிவிப்பதாகவும் தெரியவருகிறது.

## "மாணவர்கள் விரக்தி!"

### பாடசாலை அதிபர் கூறுகிறூர்

(சுண்டுக்குளி)

''இன்று மாணவர்கள் மிகவும் சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் தமது கல்வியை விரக்திநிலையில் தொடர்கின்றனர். எம்முடையமிக முக்கியமான சொத்து கல்வியே எத்தகையசூழ்நிலையிலும் நாம் கல்வியை தொடரவேண்டியது இன்றியமையாதது இன்றைய நிலையினை நன்குபுரிந்து கொண்டு மாணவர்களுக்கு கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்புப் பரிசுகள், வசதிகுறைந்த மணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் மாணவர் நலன்கருதி கல்வி நூல் வெளியீடுபோன்ற வியக்கத்தக்க பணிகளைப்புரிய முன்வந்தமை பாராட்டத்தக்கது. இம்முன்மாதிரியினை ஏனைய கிராமத்தோரும் பின்பற்றி எமது மூலவளமான மூளை வளத்தைபெருக்க அனைவரும் முன்வரவேண்டும்''

இவ்வாறு குரும்பசிட்டி உதயதாரகை கல்விச்சேவை நடாத்திய புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. பாலசுந்தரம் கூறினூர்.

உதயதாரகை கல்விச்சேவை நிறுவனப் பொறுப்பாளர்களில் ஒருவரான க. ஸ்கந்தமூர்த்தி தலைமையில் உரையாற்றிய யூனியன் கல்லூரி அதிபர், ஆசிரியர் மகாதேவாவின் இரசாயனவியல் நூல் வெளியிடப்படுவதை தனக்குக் கிடைத்த கௌரவமாகக் கொள்வதாயும் இந்த நிறுவனத்தைப்போல் வேறு இடங்களில் தாம் கேள்விப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ்வாண்டிற்கான புலமைப் பரிசில்களை 6ம் வகுப்பு- செல்வன் கு. நிஷாகரன் குரும்பசிட்டி பொன்பரமானந்தர் ம. வி, 7ம் வகுப்பு- செல்வன் சி துஷ்யந் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி 8ம் வகுப்பு- செல்வன் ப. அச்சுதன் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, 9ம் வகுப்பு- செல்வன் ப. மயூரன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, 10ம் வகுப்பு- செல்வன் சு சேந்தன் யாழ் இந்துக் கல்லூரி, உயர்தரவகுப்பு செல்விகள் ப கீதா, ச. சித்திரா வாயாவிளான் ம. ம. வி ஆகியோர் பெற்றனர்.

ஆசிரியர் எ. மகாதேவா இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி சிறப்புரையாற்றினூர்.

## மினி பஸ் பயணிகளுக்கு எச்சரிக்கை

(மட்டுவில்)

''மினி பஸ்களில் பிரயாணஞ் செய்யும் பிரயாணிகளே! நீங்கள் பிரயாணம்செய்யும் மினி பஸ்ஸுக்கு வீதியில் ஓட அனுமதியிருக்கலாம் ஆனல் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல அனுமதியுண்டா? என்பதைக் கண்டறிந்த பின்னரே மினிபஸ்ஸில் பிரயாணம்செய்யவேண்டும்.''

இவ்வாறு மினி பஸ் ஒன்றில் பிரயாணம்செய்த பிரயாணிகளுக்குப் பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் எச்சரிக்கை செய்தார்.

சாவகச்சேரியிலிருந்து கோப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் சென்ற மினிபஸ் ஒன்றை பாதுகாப்புப்படையினர் நல்லூர் கோவில் வீதியில் மறித்துச் சோதனையிட்டனர்.

மினி பஸ் முன்கண்ணுடியில் 'பாஸ்' என்று பெரிதாக ஒட்டப்பட்டுமிருந்தது.

பிரயாணைகளைச் சோதனையிட்ட பாதுகாப்புப்படையினர் சோதனைகள் முடிந்ததும், ''இந்த மினிபஸ்ஸில் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளீரா!'' என்று சாரதியிடம் ஒரு கேள்வியை எழுப்பினூர்.

அதற்குச் சாரதி ''நாம் கச்சேரியில் சென்று அனுமதி பெற்றுள்ளோம்: கச்சேரியில் கொடுக்கப்பட்டுள்ள பத்திரத்தை முகப்புக்கண்ணுடியில் ஒட்டியுள்ளோம். ''வேறும் அனுமதிகள் இருப்பது பற்றி எனக்குத் தெரியாது, நான் இந்த மினிபஸ் முதலாளியிடம் சங்பளத்திற்கு வேலை செய்கிறேன்'' என்றூர்

நீண்ட நேரம் மினி பஸ்ஸைச் செல்லவிடாது தடை செய்திருந்த பாதுகாப்புப் படையினர், பிரயாணிகளின் இரக்கமான வேண்டுகோளைத் தொடர்ந்து பிரயாணிகளைச் செல்ல அனுமதித்தனர்.

## கோரிக்கை நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வானிலை அவதான நிலைய இயக்குநர் திரு. ஜி. ரி. அருளானந்தத்தின் சேவையை நீடிக்குமாறு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சைபொதுமக்கள் கேட்டும், இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

## "இரத்த வெள்ளத்தில் அப்பா கிடந்தார்"

### அல்லாரைச் சம்பவம்: மகன் சாட்சியம்

(மட்டுவில்)

''ஐயோ என்ற சத்தம் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்தேன் அப்பா மண்டை பிளந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதும் அவர் அங்கு மரணமானூர்''

அல்லாரை தெற்கு என்ற இடத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்திய சாவகச்சேரி நீதவான் திரு. என். யோகசிகாமணி முன்னிலையில் சாட்சியமளித்த இறந்தவரின் மகன் சி. ஞானசேகரம் மேற்கண்டவாறு கூறினூர்.

அல்லாரை தெற்கைச் சேர்ந்த இ. சின்னத்தம்பி அல்லது இராசையா என்ற 11 பிள்ளைகளின் தந்தை (45 வயது) சீவல் தொழிலாளி ஒருவரே இப்படி மரணமானவராகும். சாட்சி மேலும் கூறியதாவது:-

சம்பவதினம் இரவு 7 மணியளவில் அப்பா வீட்டைவிட்டு வெளியே சென்றிருந்தார். சிறிது நேரத்தில் 'ஐயோ' என்ற அபயக்குரல் ஒன்று கேட்டது. உடனே நான் அங்கு ஓடிப்போனேன் அப்பா இரத்த வெள்ளத்தில் கிடந்தார் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம் அவர் அங்கு மரணமானூர்''

சாவகச்சேரி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ரீ. சோமசுந்தரம் பிரேத பரிசோதனை நடத்தினூர். உலக்கை போன்ற ஒன்றூல் தாக்கப்பட்டிருக்கலாம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இறந்தவரின் மனைவி குஞ்சம்மாவும் சாட்சியமளித்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்துகொண்ட சாவகச்சேரி நீதவான் திரு. என் யோகசிகாமணி கொலை எனத்தீர்ப்பளித்தார்.

## வேலக்கையில் தைப்பூசம்

(மானிப்பாய்)

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் நேற்று தைப்பூசத்திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பெருந்திரளான அடியார்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தற்காலிக ஊழியர்கள் வேலைநீக்கம்!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் மாதாந்தச் சம்பளம் பெறும் தற்காலிக ஊழியர்கள் 16 பேர் இம்மாதம் தொடக்கம் தமது வேலையை இழக்கின்றனர்.

இதுசம்பந்தமான கடிதங்கள் பெருந்தெருக்கள் திணைக்கள இயக்குநரிடமிருந்து மேற்படி ஊழியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது

''வடபகுதியில் வீதி வேலைகளை நிறுத்தி வைப்பதென்ற அரசாங்கத்தின் முடிவுக்கு இணங்க பெப்ரவரி மாதம் முதல் இவர்களது வேலைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் இந்த ஊழியர்கள் வேலை இழந்துள்ளமையால் அவர்கள் மிகவும்கஷ்டமான நிலையை அடைந்துள்ளார்கள். (சூ)

## கசிப்பு உற்பத்தியாளருக்கு எச்சரிக்கை!

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் மீண்டும் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தி, விற்பனையை ஒழித்துக்கட்டுவதற்கான நடவடிக்கைகளை இம்மாவட்டத்திலுள்ள தெங்கு-பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் மேற்கொண்டுவருகின்றன.

ஒவ்வொரு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கமும் தத்தமது சங்கப்பரப்பெல்லைக்குள் கசிப்பு உற்பதியிலீடுபடுபவர்களைக் கண்டுபிடித்துப் பட்டியல்களைத் தயாரித்துவருகின்றன சில தீவிரவாத இயக்கங்களும் கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு எச்சரிக்கை செய்து பிரசுரம் விடுத்துவருவதுடன், கசிப்பு உற்பத்தி செய்பவர்களையும், விற்பனையாளர்களையும் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களுக்கு சனசமூக நிலையம் உதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அச்சுவேலி ஆவரங்காலில் இடம்பெற்ற அசம்பாவிதத்தால் வீடுகளை விட்டு வெளியேறி புத்தூர் கிழக்கு புத்தகலட்டி பாடசாலை, புத்தூர் மேற்கு சன சமூக நிலையம், சிறுப்பிட்டி மேற்கு பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்த மக்களின் பராமரிப்புக்கு புத்தூர் மேற்கு கலைமதி சன சமூக நிலையம் கோப்பாய் தொகுதியின் பல கிராமங்களில் நிதிசேகரித்தது. பொதுமக்கள் வழங்கிய தாராள நிதி, உணவுப் பொருள் உதவிகள் நாநூறுக்கும் அதிகமான தஞ்சமடைந்த மக்களுக்கு வழங்கப்பட்டது அந்நிதியில் எஞ்சிய பகுதியை மேற்படி சன சமூக நிலையம் மயிலிட்டியில் தொழில் இன்றி கஷ்ட நிலையில் உள்ள நூறு மீனவர் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களாக வழங்கியது.

## 4,000 ஆங்கில ஆசிரியர் விரைவில் நியமனம்!

[கொழும்பு]

நாட்டில் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, 4 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆசிரியர்கள் நாடெங்கிலும் ஆங்கிலம் படிப்பிப்பதற்கு விரைவில் நியமிக்கப்படுவார்கள்.

இந்த ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இடங்களிலிருந்து போதனுசிரியர்கள் இங்கு வரவுள்ளார்கள்.

# ஒரு வயதுப் பெண் குழந்தை மின்சாரம் தாக்கி மரணம்!

## தாயும், சகோதரியும் ஆபத்தான நிலையில் அனுமதி!

[மட்டுவில்]

மின்சாரம் தாக்கியதால் ஒரு வயதுப் பெண் குழந்தை ஒன்று ஸ்தலத்திலேயே பலியானது.

அப்பிள்ளையின் தாயும் மற்றொரு குழந்தையும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான மின்வயர் ஒன்று அறுந்து கிணற்றினுள் விழுந்திருந்ததால் பிள்ளைக்குக் குளிக்க வார்க்கத் தண்ணீர் அள்ளிய தாயும், குளிக்கச் சென்ற குழந்தைகளும் இந்த மின்சாரத் தாக்குதலுக்குட்பட்டனராம்.

திருமதி இராஜேஸ்வரி என்ற சாவகச்சேரியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரே இந்த மின்சாரத் தாக்குதலுக்குள்ளானவராவார். (கி)

---

## தமிழ் நில அளவையாளர்கள்

# சம்பளமற்ற லீவு தரும்படி கோரிக்கை!

(மாவிட்டபுரம்)

வவனியா தெற்குப்பகுதியிலும், அதற்கு அப்பாலும் கடமைபுரிந்த தமிழ் பேசும் நில அளவையாளர்கள் நாட்டில் சுமுகநிலை தோன்றும் வரை தமக்கு சம்பளமற்ற லீவு தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக்கால சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி நில அளவையாளர்கள் சுமார் 27 பேர் யாழ் நில அளவையாளர் அலுவலகத்தில் கூடி தமது நிலைகுறித்து ஆராய்ந்தனர்.

திரு. கு சண்முகலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நில அளவையாளர்கள் தாம் கடமை புரியும் இடங்களில் சுதந்திரமாக பணியாற்ற முடியாதிருப்பதையும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதையும் சுட்டிக்காட்டினர்

இதையடுத்து நாட்டில் சுமுகநிலை ஏற்படும்வரை தமக்கு சம்பளமற்றலீவு கிடைக்க ஆவன செய்யும்படி நில அளவையாளர் தொழிற்சங்கத்திற்கு கோரிக்கை விடுப்பதென அவர்கள் முடிவுசெய்தனர்.

இக்கோரிக்கையை சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் அனுப்பிவைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (கி)

---

# எஜமானின் காலடியில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

கார் சாரதியாகவும், சமையல்காரராகவும், 12 வருடங்கள் பணியாற்றிய இளைஞர் சம்பவதினம் ஓடிவந்து எஜமானின் காலில்விழுந்தபோது அடுத்தடுத்து துப்பாக்கி வெடிதீர்ந்ததால் பலியானர்

யாழ். கச்சேரியடியிலுள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் வசித்த குருநாகலைச்சேர்ந்த கெடத்தல்பேடி துரைலாகே பியதாசாவின் (29 வயது) மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

டாக்டர் கதிரிதம்பி ராஜரத்தினம் வீட்டில், பியதாசா 12 வருடங்கள் பணியாற்றி வந்ததாகவும், டாக்டரின்பிள்ளைகள் எல்லோரும் வெளிநாட்டுக்கு சென்றுவிட்டதால், டாக்டரும் பியாதாசாவும் மட்டுமே வீட்டில் வசித்து வந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

84ம் ஆண்டு அக்டோபரில் பியதாசா, குருநாகலுக்கு சென்றுவிட்டு டிசம்பர் 30ம் தேதி திரும்பி டாக்டர்வீட்டிற்கு வந்ததாகவும், இம்மாதம் 24ம் தேதி மாலை 5 மணியளவில், டாக்டர் ஹோலுக்குள் இருந்தபோது, வெளியில் சத்தம்கேட்டதாகவும், பின் பியதாசா ஓடிவந்து டாக்டரின் காலடியில் விழுந்தபோது, இனந்தெரியாத ஒரு உருவம், துரத்திவந்து பலதடவை சுட்டதாகவும், டாக்டருக்கு கண்பார்வை குறைவானதால், அந்த உருவத்தை அடையாளம் காண முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் இராணுவத்தினர் சடலத்தை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததாகவும் கூறப்பட்டது பிரேதபரிசோதனையின்பின் சடலம் எஜமானிடம் ஒப்படைக்கப்பட்டது. விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

---

## இடமாற்றம்

[சுண்டுக்குளி]

பௌதீகவியல் ஆசிரியரான திரு நல்லதம்பி சௌந்தரராஜா சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலிருந்து இவ் வருட ஆரம்பம்முதல் யாழ். இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## எல்'. பி. காஸ் தட்டுப்பாடு நீங்கும்

(கொழும்பு)

சமையலுக்குப பயன்படுத்தப்படும் எல். பி. காஸ் தட்டுப்பாடு விரைவில் நீங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

சிங்கப்பூரிலிருந்து 660 மெட்ரிக்தொன் எல். பி. காஸ் கொழும்பு வந்துசேர்ந்துள்ளது. மேலும் 572 மெட்ரிக் தொன் இந்தோனியாவிலிருந்து வந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது; (கி)

---

## கடத்தப்பட்ட தந்தை—மகன்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவில் கடத்தப்பட்ட தந்தையும் மகனும், இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆயுதப்படையினரும் பொதுமக்களும் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்

---

## ஒருவர்பலி!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் நேற்று முன்தினமிரவு ஒருவர், இனந்தெரியாதவர்களால் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானர்.

வட்டுவாகலைச் சேர்ந்த சுமார் 40 வயதான தியாகுப்பிள்ளை என்பவரே பலியானவர் எனக்கூறப்படுகிறது. (க)

---

## யாழ். மாநகர சுகாதாரப்பகுதி இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதாரப்பகுதி, நகரமண்டபத்திற்கும், வேறு சில இடங்களுக்கும் மாற்றப்படவிருக்கிறது.

இம்மாதம் 6ந்தேதி தொடக்கம், புதிய இடத்தில் சுகாதாரப்பகுதி இயங்கும் என்று தெரியவருகிறது. [க]

---

## முல்லைத்தீவில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வர்த்தக நிலையங்களில், தேசியக் கொடிகள் பறக்கவிடப்படவேண்டுமென்று சீருடையணிந்தவர்களால் வலிபுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முல்லைத்தீவில், தேசியக் கொடிகள், விற்பனைக்கில்லாததினல், வர்த்தகர்கள் அவற்றைப் பெறமுடியாதநிலையில் இருப்பதாக கூறப்படுகிறது [க]

---

# எம்.ஜி.ஆருக்கு நியுயோர்க்கில் வரவேற்பு

[நியூயோர்க்]

நியூயோர்க் நகரில் வாழும் தமிழர்களால், கிசிச்சை முடிந்து சென்னை புறப்பட்ட தமிழக முதல்வர் எம். ஜி ராமச்சந்திரனுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

புரூக்ளின் மருத்துவமனை மண்டபத்தில் நடந்த இவ் விழாவில் சுமார் 500 தமிழர்கள் கலந்துகொண்டனர்.

எம். ஜி ஆரை அவரது மனைவி ஜானகி, விழா மண்டபத்திற்கு அழைத்துவந்தபோது எல்லோரும் எழுந்து நின்று கரகோஷம் செய்தனர்.

எவருடைய உதவியுமில்லாமல் தானகவே எம். ஜி ஆர். சுமார் 300 அடி தூரம் நடந்து வந்து விழா மண்டபத்தில் உள்ள ஆசனத்தில்அமர்ந்தார்.

வெள்ளை வேட்டி சட்டையுடன் வழக்கமாக அணியும் வெள்ளைத் தொப்பியும் அணிந்திருந்தார், மேடைக்கு வந்ததும் அனைவரையும் கைகூப்பிவணங்கினர். சுமார் 2 மணி நேரம் நடந்த இவ்விழாவில் பலர் உரைநிகழ்த்தினர்கள். பலர் மாலைசூட்டினர்கள்.

மாலை சூட்டும்போது எம். ஜி ஆர் எழுந்துநின்று வணக்கம் தெரிவித்தார் விழா முடிந்த பின்னர் எம். ஜி. ஆர் எழுந்து நடந்து சென்றபோது, மண்டபத்தில் இருந்தவர்கள் கரகோஷம் செய்தனர்.

எம், ஜி ஆர் கடந்த சனிக்கிழமை, இந்தியா போயிங் விமானத்தில் சென்னைக்குப் புறப்பட்டார். விமான நிலையத்திலும், ஏராளமான தமிழர்கள் வழியனுப்பிவைத்தார்கள்.

வழமையாக நியூயோர்க்கிலிருந்து பம்பாய்வரை செல்லும் இந்த விமானச் சேவை, சென்னைவரை நீடிக்கப்பட்டுள்ளது.

---

# இடைக்காடு சந்தி மதகு தகர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

இடைக்காடு சந்தி மதகு நேற்றுமுன்தினமிரவு குண்டு வைத்து தகர்க்கப்பட்டதால், அப்பாதையால் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்து சேவை பஸ்களும், மற்றும் மினி பஸ்களும் யாழ்ப்பாணத்திலிருந்து அப்பாதையினுல் சேவை நடத்தி வந்தது. மதகு தகர்க்கப்பட்டதால் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது

அச்சுவேலி பாதை வழியாக தற்போது பஸ்சேவை நடைபெறுகிறது. பிரயாணிகள் தகர்க்கப்பட்ட பாலத்தடியில் இறங்கி நடந்து சென்று பயணத்தை தொடருகிறுர்கள். [க]

---

# சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் அச்சம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் காரணமாக தொழிலாளர்கள் மத்தியில் பெரிதும் அச்சம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது

அண்மைக்காலமாகசிமெந்து ஆலையில் அடுத்தடுத்து கொள்ளைச் சம்பவங்களும் பதட்ட நிலையும் ஏற்பட்டு தொழிலாளர்கள் மத்தியில் பெரிதும் பீதி ஏற்பட்டுள்ளது.

இவற்றின் எதிரொலியாக தொழிற்சாலையின் நடவடிக்கைகள் ஸ்தம்பிக்கும் நிலைஏற்படுமா? அதன் மூலம் தாம் வேலைஇழக்கும் அபாயம் ஏற்படுமா? என தொழிலாளர்கள் மதியில் அச்சம் நிலவுவதாக கூறப்படுகிறது

சிமெந்துகூட்டுத்தாபனசிமெந்து ஆலையிலும்லங்காசிமெந்து லிமிட்டெட் சீமந்து ஆலைதுறைமுக பகுதி ஆகியவற்றிலும் 4000 தொழிலாளர்கள் வரை கடமைபுரிகின்றனர். [கி]

---

# கொழும்பில் முழு அளவில் தேசியக் கொடிமயம்!

## கொடியில்லாத வீடுகள்மீது சந்தேகப்பார்வை

(கொழும்பு)

கொழும்புப் பகுதியில் சகல வீடுகள் வாகனங்களிலும் தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

கொடிகள் பறக்கவிடப்படாத வீடுகள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுமளவிற்கு இருக்கின்றன.

ஆகையால் இனவேறுபாடின்றி சகல இல்லங்களிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது

கொடிகள் காணப்படாத வாகனங்கள், வீடுகள் அச்சுறுத்தல்களுக்குள்ளாகும் அபாயம் காணப்படுவதாகவும் கூறப்பட்டது

'தேசியக்கொடி' மோகம் கொழும்பில் பரந்தளவில் பீடித்துள்ளது. அங்காடிகள், மற்றும் வீதியோரக் கடைகள் அனைத்திலும் தேசியக்கொடி விற்பனை மும்மரமாகவுள்ளது [கி]

---

## 'சென் ஜோன்ஸ் அம்புலன்'

# தளபதிப் பட்டம்பெறும் முதலாவது தமிழர்!

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் எலிஸபத் மகாராணியாரால் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை பிரமுகர் முகந்திரம் ஈ. பி இராசையா தளபதிப்பட்டம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டுள்ளார்

இவரே சென் ஜோன் அம்புலன்ஸின் இந்த உயர் கௌரவத்தைப்பெறும் முதலாவது தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடன் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த நான்கு சென் ஜோன் அம்புலன்ஸ் அதிகாரிகளுக்கும் சிறப்புப்பட்டங்கள் மகாராணியாரால் வழங்கப்பட்டுள்ளன.

அவர்கள் விபரம் வருமாறு: முகாந்திரம் ஈ பி இராசையா கமாண்டர் ஒவ் த ஓடர் ஒவ் சென் ஜோன்ஸ் திருமதி அந்தோனியா சாமிநாதன், 'ஆபிஸர் சென் ஜோன்ஸ்', டாக்டர் ஆர் சுகந்தன இன்ஞசித்தப்பி 'சேர்விங் பிறதர் ஒவ் சென் ஜோன்ஸ்' திருமதி உருத்திரா கந்தசாமி 'சேர்விங் ஸிஸ்டர் ஒவ் சென் ஜோன்ஸ்'

மேற்குறிப்பிட்ட சென் ஜோன் அம்புலன்ஸ் அதிகாரிகள் அனைவரும் இந்த முதலுதவி இயக்கத்தில் நீண்டகாலம் சேவையாற்றியவர்கள். இச்சேவையைக் கௌரவித்தே பிரிட்டிஷ் மகாராணியாரால் இக்கௌரவப்பட்டங்கள்வழங்கப்பட்டுள்ளன.

லண்டன் வர்த்தமானியிலும் இப்பட்டங்கள் வழங்கப்பட்டிருப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

---

## பெண் விடுதலை

[வவனியா]

கடந்த 22ம் திகதி புளியங்குளத்தில்வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மீனட்சி என்ற பெண் விடுவிக்கப்பட்டுள்ளார்

வவனியா பிரஜைகள் குழு இங்குள்ள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கைதுசெய்யப்பட்ட பெண்ணை விடுவித்துள்ளனர்.

---

## அகதிகளுக்கு மாணவர்கள் பொருள் சேகரிப்பு

[ஊர்காவற்றுறை]

முல்லைத்தீவு அகதிகளுக்கென ஊர்காவற்றுறைப்பகுதியில்சேகரித்த ஏராளமான உடுபுடவைகளை ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினர் பிரஜைகள் குழு மூலம் அகதிகளுக்குஅனுப்பிவைத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் திரு எஸ் ஏ ஈ இரத்தினராஜா மாணவர்கள் மூலம் உதவிப்பொருட்களை சேகரிக்க ஏற்பாடு செய்திருந்தார்

அகதிகளுக்கென மாணவர்களால் சேகரிககப்பட்ட சுமார் 13 ஆயிரம் ரூபாவும் பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இந்த நிதி உதவிப்பொருட்கள் சேகரிப்பில் வேறு பாடசாலை மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர்.

## வவனியாவுக்கு தீ அணைக்கும் படை அவசியம்

[வவனியா]

250-க்கு மேற்பட்ட வியாபாரத்தலங்கள் வவனியாவில் இருப்பதினுல் இங்கு ஒரு நிரந்தர தீ அணைக்கும் படைப் பிரிவு அமைக்கப்படவேண்டியதின் அவசியத்தினை வவனியா பிரஜைகள் குழு உப தலைவர் ஜனுப் பி. எஸ். அப்துல்லா வலியுறுத்தியுள்ளார்.

## தீயணைக்கும் படைக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி கூட்டுறவு நலன் விருத்திச் சங்கம் யாழ் மாநகரசபை தீயணைக்கும் படைக்கு 2 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

இம் மாதம் 7 ம் திகதி நடைபெறவிருக்கும் மேற்படி சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் வைத்து இந்த நிதி வழங்கப்படவுள்ளது

யாழ் ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு 2,700 ரூபாவும், சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாக சீருடைகளும், இலவச கொப்பிகளும் வழங்கப்படும் (மா)

## மகாசபைக் கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மத்தி பெருங்காடு வரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகாசபைக் கூட்டம் இம்மாதம் 7-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. சபைத் தலைவர் திரு. மா. குமாரசுவாமி தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறுவதுடன் ஆலய அபிவிருத்தி பற்றி ஆலோசிக்கப்படுமென்று சபையின் நிர்வாகச் செயலாளர் திரு. த. சிவகுமாரன் தெரிவித்தார்.

## ''மாணவரை விடுவியுங்கள்'' மாணவர்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்டு பூஸா முகாமில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் ஆனந்தம் செல்வகுமார் (தாய்-தந்தையரை இழந்தவர்), சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் முருகேசு அருளானந்தம் ஆகிய இருவரையும் விடுதலை செய்யும்படி யாழ். மாணவர்கள் பிரதிநிதிகள் குழு யாழ் அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த வருட டிசம்பரில் குழப்பப்பட்ட க. பொ. த. பத்திரப்பரீட்சையும் நடாத்துவதற்கு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அம் மகஜரில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (மா)

## வேலித்தகராறு ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

வேலித் தகராறினுல் காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் பலியாஞர்.

இளவாலையைச் சேர்ந்த இன்னுசிமுத்து சுவாமிநாதர் துரைராஜா (56 வயது) என்பவரே பலியானவராவர்.

இவரது மரண விசாரணையை யாழ் பதில் நீதவான் க. கேசவன் நடத்திஞர்.

இம் மாதம் 27ம் திகதி காயமடைந்து. ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்றுமுன்தினம் மரணமாஞர் எனத் தெரிவிக்கப்பட்டது பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (க)




# தேசிய பாதுகாப்பு நிதி

Phoenix

எமது நாட்டைப் பிளவுபடுத்திச் சீர்குலைப்பதற்காகச் சில தீய சத்திகள் தலைதூக்கித் தாண்டவமாடும் இந்த இக்கட்டான வேளையில் இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் நாட்டுக்காகப் பணியாற்றவேண்டியது அவசியமாகின்றது.

தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டுக்கோப்பையும் பூரண சிரத்தையுடனும் விசுவாசமாகவும் பேணிக்காப்பதற்கு நீங்கள் மனப்பூர்வமாக முன்வரவேண்டும். வருங்காலச் சந்ததியினரின் வாழ்வு சுபீட்சமும் சமாதானமும் நிறைந்து திகழ்வதும், 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எமது பாரம்பரியமும் பண்பாடும் அழியாது பேணிக்காக்கப்படுவதும் உமது கையில்தான் தங்கியுள்ளது.

இத்தகைய ஒரு இக்கட்டான நிலையில் உங்கள் உதவி நாட்டுக்குத் தேவைப்படுகின்றது. நாட்டை எதிர்நோக்கியிருக்கும் போராபத்திலிருந்து காப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பும் பணவுதவியும் அவசியமாகும்.

உங்கள் பணவுதவிகளைப் பின்வருமாறு அனுப்பிவைக்கலாம்:

- உங்கள் பணவுதவிகளை நாட்டின் எப்பாகத்திலுமுள்ள இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கிக் கிளை எதிலும், 'தேசிய பாதுகாப்பு நிதி' யின் கணக்குக்குச் செலுத்தமுடியும், வங்கி இதற்குப் பற்றுச்சீட்டு வழங்கும்.
- நீங்கள் கணக்கு வைத்திருக்கும் எந்த இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கிக் கிளையிலும் 'தேசிய பாதுகாப்பு நிதி'யின் கணக்குக்கு காசோலை மூலமும் உங்கள் பணவுதவிகளைச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளமுடியும்.
- காசோலைகளையும் காசுக்கட்டளைகளையும் அஞ்சற் கட்டளைகளையும் செயலாளர், தேசிய பந்தோபஸ்து அமைச்சு, குடியரசுச் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
- பணவுதவிகள் சமூக சேவைகள் அமைச்சு, இல. 14, பார்ன்ஸ் இடம், கொழும்பு 7 என்னும் முகவரியிலும் மாவட்ட மட்டத்தில் அந்தந்த மாவட்டத்திலுள்ள கச்சேரிகளில் அரசாங்க அதிபர்களுக்கும் செலுத்தப் படலாம். பொதுமக்களிடமிருந்து காசாக நிதியுதவியைப் பெறுவதற்கும் பற்றுச்சீட்டுகள் வழங்குவதற்கும் சமூக சேவைகள் அமைச்சிலும் அரசாங்க அதிபர்களிடமும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- பொருளுதவிகளைப்பொறுத்தவரை, தேவைப்படும் பொருள்களைப்பற்றி முதலில் தெரிந்துகொள்ளாமல் எவ்விதப் பொருளுதவிகளையும் செய்வதற்குப் பொதுமக்கள் முன்வர வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அது தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ள பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:-

செயலாளர், தேசிய பந்தோபஸ்து அமைச்சு,
குடியரசுச் சதுக்கம், கொழும்பு-1.
தொலைபேசி: 545032, 545031.

உணவுப் பொருள்களையும் உடைகளையும் பொறுத்தவரை, கிடைக்கப் பெற்ற உதவிகள் தற்போதைக்குப் போதுமானவை என்பதைப் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்படும் உதவுதொகைகள் யாவும் வரி விலக்குடை**

Advt.

# வடக்கு, கிழக்கில் 2, 50, 000 பேரைக் குடியமர்த்தத் திட்டம்

[பி ராஜரட்ணம்]
வடக்கிலும் கிழக்கிலு இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் பேரைக் குடியமர்த்துவது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

பெருந்தொகையானவர்களை இப்பகுதிகளில் குடியமர்த்துவதனுல் தலைதூக்கும் தொழில் பிரச்னை பற்றி ஆராய்ந்து வரும் அரசாங்கம்; விவசாயம் கடற்றெருழில் துறைகளில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காக ஒல்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் குறிப்பிட்ட அளவு நிதியை ஒதுக்கவும் ஆலோசித்து வருகிறது.

## இந்திய ஜனுதிபதி, பிரதமர் வாழ்த்து

புதுடில்லி பெப் 4
இலங்கையின் 37வது சுதந்திரதினத்தையொட்டி ஜனுதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிற்கும், பிரதம மந்திரிக்கும். இந்திய ஜனுதிபதி திரு ஸெயில் சிங்கும், பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தியும் வாழ்த்துச் செய்திகளை அனுப்வைத்துள்ளனர்.

## இந்த ஊழியரின் சம்பளக் காசோலைகளில் தவறுகள்!

[கோப்பாய்]
மயிலிட்டி காசநோய் ஆஸ்பத்திரியில் கடமைபுரியும் சமயோசித ஊழியர்களின் டிசம்பர் மாதச் சம்பளம் ஜனவரி மாதம் பிற்பகுதியில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட தனித்தனி காசோலைகளாக வழங்கப்பட்டுள்ளன.

சிங்களத்தில் சம்பந்தப்பட்ட ஊழியர் பலரின் பெயர் தவறுதலாகவும்; பிழையாகவும் எழுதப்பட்டிருப்பதால் ஊழியர்கள் காசோலையை பணமாக மாற்றுவதற்கு முடியாமல் கஷ்டமுறுகின்றனர்.

காசநோய் வைத்தியசாலையின் 'கட்டுப்பாட்டு நிர்வாகம்' கொழும்பில் செயற்படுவதால் கொழும்பு வங்கியின் பெயரில் எழுதப்பட்டிருப்பதால் தபாலில் ஏற்படக்கூடிய தாமத்தை உத்தேசித்து வடபகுதியில் வங்கி கணக்குள்ள வர்த்தகர்கள் மற்றையோர் காசோலையை ஏற்பதற்கு தயங்குகின்றனர்.

சம்பளம் கிடைக்கவேண்டிய காலத்திற்கு பிந்தி கிடைத்துள்ளபோதிலும் பெயர்களில் உள்ள பிழையினுல் சிலரின் சம்பளக் காசோலை திருப்பி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாம்

## பொதுமக்கள் பாதிப்பு

(மாவிட்டபுரம்)
வலிகாமம் வடக்குப் பகுதியில் பல தபால் நிலையங்கள் மூடப்பட்டதாலும், தொலைத்தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாலும்பொது மக்கள் தமது அவசியத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது திண்டாடுகின்றனர்.

தபால் நிலையங்கள் மூடப்பட்டதாலும், தொலைதொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் போக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

ஆலயமணியின்ஓசை என்ன செய்யும்?

இது ஒரு கதை அல்ல. மண்ணின் உண்மைநிலை. படித்துப்பாருங்கள்:

வடபகுதி ஆலயங்களில் பொதுமக்கள் வழிபாடு செய்யவும், பூசகர்கள் விதிமுறைப்படி பூசைசெய்யவும் தயங்குகின்றனர்!

பூசைவேளையில் சைவஆலயங்களிலும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் மணிஓசை எழுப்பி மக்களுக்கு அறியச்செய்யும் முறை, காலாகாலமாக அனுசரிக்கப்பட்டு வந்தபோதிலும் தற்பொழுது கேட்கும் மணிஓசை பாதுகாப்புப்படையினருக்கு தப்பாக ஒலிப்பதால் பூசகர்களும் பொதுமக்களும் பல்வேறு விதமான விசாரணைகளுக்கு உள்ளா ன்றனர். இதனுல் பல ஆலயங்களில் மணிஓசை கேட்பதுகூட இல்லாமல் போய்விட்டது.

ஊரடங்குச் சட்டவேளைகளில் ஆலயங்களில், பூசைகள், வழிபாடு நடைபெறுவது இல்லை. இதனுல் ஆறுகாலப் பூசை நடைபெறும் சைவஆலயங்களில் விதிமுறைப்படி பூசை, வழிபாடு செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. தற்செயலாகப் பாதுகாப்புப்படையினர் வீதியில் வரும்போது கோயில்மணி கேட்டால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளை உத்தேசித்து, பல ஆலயங்களில் பெரியமணி ஒலிப்பதே இல்லை!

தொண்டமாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தை வெள்ளிக்கிழமை தோறும் வழிபடும் அடியவர்கள் தொகை பல்லாயிரம். ஆனுல் தற்பொழுது ஆலயச் சுற்றுடலில் அடியவர்களைக் காண்பதே அரிதாக உள்ளது. முருக பக்தர்களில் பலர் செல்வச்சந்நிதி முருகனை வழிபடுவதை மாதக்கணக்காக (சூழ்நிலையால்) பின்போட்டுள்ளனர்!
(தகவல்:- நமது கோப்பாய் நிருபர்)

— ஊடுருவி

# பஸ் விபத்து: 16 பேர் பலி!

(சென்னை)
கொடைக்கானல் மலைப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 16 பேர் ஸ்தலத்தில் பலியானுர்கள். இவ்விபத்தில் 52 பேர் காயமடைந்தனர்.

மலைச்சாரலில் பஸ் சென்று கொண்டிருந்தபோது, விழுந்து நொருங்கியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (வெ)

## காசுக் கட்டளைக்கு மட்டுமே பஸ் 'சீசன்'!

(யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணத்தில் பஸ் சீசன் டிக்கற் காசுக் கட்டளைக்கே இனி வழங்கபபடும். முன்னர் அறிவிக்கப்படி தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று வழங்கப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 6 ம் திகதி முதல் 10 திகதி வரை யாழ் பஸ் நிலையத்தில் மட்டும் இந்த டிக்கற்றுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீசன் டிக்கற்றுக்கு பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்றும், காசுக்கட்டளை (மணி ஓடர், போஸ்டர்ஓடர்) அல்லது அரசாங்க காசோலைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

முகாமையாளர், வடபிரதேச போக்குவரத்துச் சபை, யாழ். சாலைகள் முகவரிக்கு காசுக்கட்டளைகள் பெறப்பட வேண்டும். எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரூபவாஹினி

மாலை
- 5-00 செய்திகள்
- 5-05 சிறுவர் நிகழ்ச்சி
- 5-30 இசை நிகழ்ச்சி
- 5-45 சஞ்சிகை நிகழ்ச்சி தமிழ்]
- 6-00 விளையாட்டு நிகழ்ச்சி
- 6-15 தமிழ் நிகழ்ச்சி
- 6-30 செய்திகள் [தமிழ்]
- 6-55 விவரணச் சித்திரம்
- 7-25 ஆங்கில நிகழ்ச்சி
- 8-00 செய்திகள் [சிங்களம்]
- 8-20 ஆங்கில நிகழ்ச்சி [தொடரும்]
- 8-40 ஆங்கில நிகழ்ச்சி
- 9-00 செய்திகள் [ஆங்கிலம்]
- 9-50 உலக கிரிக்கெட் விளையாட்டு நிகழ்ச்சி
- 10-50 சிங்கள நிகழ்ச்சி
- 11-00 ஒன்பரப்பு முடிவு.


றீகல் மினி
தினசரி 10-15, 1-30 மட்டும்.
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நமபியார், மனுகர், நாகேஷ் நடிக்கும்
ஆயிரத்தில் ஒருவன்
(ஈஸ்ட்மென் கலர்)

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே.ஆர்.விஜயா ரஜனி
ஜஸ்ரிஸ் கோபிநாத்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)


# முதலமைச்சர் எம். ஜி. ஆர். சென்னை வந்து சேர்ந்தார்

(சென்னை)
**தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று காலை 5-45 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்.**

பம்பாயிலிருந்து இவரை ஏற்றிக்கொண்டுவந்த விமானம் காலை 5-45 மணிக்கு சென்னை வந்துசேர்ந்தபோதும் விமான நிலையத்தில் பனி மூட்டம் அதிகமாக இருந்ததால், முதலமைச்சரும் ஏனையோரும் காலை 6-40 மணிக்கே விமானத்திலிருந்து இறங்கினுர்கள்

சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. வி. ஆர் நெடுஞ்செழியன் முதலமைச்சரை வரவேற்ருர்.

இதன்பின்னர் முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் காரில் அமர்ந்து' புன்ளகைத்துக்கொண்டு, பொதுமக்களுக்கு கைகளை அசைத்துக் காட்டியவாறு பறங்கிமலையிலுள்ளவரவேற்பு இடம்பெறும் இராணுவத்திடலைச் சென்றடைந்தார்

முதலமைச்சர் திரு, ராமச்சந்திரனை பம்பாய் விமான நிலையத்தில் ரஜீவ் காந்தியின் சார்பில் மகாராஷ்டிர மாநில அமைச்சர்கள் வரவேற்ருர்கள்.

பம்பாயிலிருந்து விமானத்தில் திரு. ராமச்சந்திரனுடன் இந்திய மத்திய சமூக சேவைகள் நலத்துறை இணையமைச்சர் மரகதம் சந்திரசேகர் உடன் வந்திருந்தார்.

ரஜீவ் காந்தியின் சார்பாகவே அமைச்சர் மரகதம் சந்திரசேகர் பம்பாயிலிருந்து ராமச்சந்திரனுடன் சென்னை வந்தார். (வெ)

## 'கட்டுப்பாடுகள் கொண்ட பாடப் புத்தகங்கள்'

(சுண்டுக்குளி)
"பாடப் புத்தகங்கள் குறிப்பிட்ட இலககுகளுக்காகச் சில கட்டுப்பாடுகளுடன் எழுதப்படுபவை மாணவர்கள் பாடப் புத்தகங்களைமட்டும் படிப்பதுடன் நிற்காமல் பாடத்துடன் தொடர்புடைய பொது நூல்களையும் வாசித்தல்வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் பெறும் அறிவை இத்தகைய வாசிப்பின்மூலம் விருத்தியாக்கிக்கொள்ள வேண்டும். வாசிப்பு 'மனிதனைப் பூரணமானவனுக ஆக்குகின்றது. ஓய்வு நேரங்களிலும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது" என யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற இது எங்கள்பாடசாலை வாரநிறைவு விழாவிற்பேசிய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் குறிப்பிட்டார். இப்போதையமாணவர்களுடன் பல பழைய மாணவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

பழையமாணவர் சங்கத்தின் சார்பில் திரு என். ஜெகதீசன், திரு. ஜி. வெங்கிடசாமி ஆகியோர் பெறுமதிமிக்க நூல்கள் பலவற்றை வித்தியாலய அதிபரிடமும் நூலகர் திரு. தம்பிநாயகம் அவர்களிடமும் கையளித்தனர் பாடசாலை வாரத்தில் நடைபெற்ற ஆக்கபூர்வமானபணிகளை விபரித்த துணை அதிபர் திரு. மு இராமலிங்கம், மாணவர்களின் ஆற்றல்களையும் ஆர்வத்தையும் விதந்துரைத்தார். சிரேஷ்ட மாணவர் தலைவர் செல்வன் டி. விக்னேஸ்வரன் நன்றியுரை கூறினுர்.

## உழுந்து உற்பத்தி வீழ்ச்சி

(வவனியா)
வவனியாவில் உழுந்து உற்பத்தி விளைவு பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஏக்கருக்கு ஒரு மூடையே விளைவ கக்கிடைக்கின்றதுஎன விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பருத்தித்துறை பிரஜைகள் குழு

(புலோலி)
பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் நடப்பாண்டு அலுவலர்களாகப் பின்வருவோர் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-- பேராசிரியர் வி. கே கணேசலிங்கம், துணைத் தலைவர்:- திரு மு பொ வீரவாகு. பொதுச்செயலாளர்:- திரு. சி சுப்பிரமணியம், துணைச்செயலாளர்கள்:- திரு. க சிவானந்தசுந்தரம்; திரு. ஆ தேவராஜன், பொருளாளர் திரு வ. ச. மகேஸ்வரன். பருத்தித்துறை நகர வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதியாக ஒவ்வொருவரும் பருத்தித்துறைத் தொகுதிக் கிராமசேவவ அலுவலர் பிரிவு ஒல்வொன்றுக்கும் இவ்விரண்டு பிரதிநிதிகளும் செயற்குழுவிற் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(போயா தினத்தை முன்னிட்டு இன்று சினிமாக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா)

## மணிவாக்கு

எவர்களிடம் திரவியம் உளதோ அவர்கள் தந்திரமும், விமிப்புமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; அந்தோ அதன் சக்தி துன்பந் தவிர வேறெதுவும் தருவதில்லை.
—தொமஸ்ஹேனெஸ்பெலி

# நமது நோக்கு

## அனைவருக்கும் சுதந்திரம்

நேற்றைய தினம் தியாகிகள் தினம் என்று எமது வாரமலரில் குறிப்பிட்ட கருத்தை சிரேட்ட தமிழ் அமைச்சர் தேவநாயகம் ஆமோதித்திருப்பது இன்றைய சூழ்நிலையில் ஒரு தேற்றமளிக்கும்செயல்.

உள்நாட்டு அமைச்சர் என்ற கோதாவில் சுதந்திர தின வைபவங்களை ஒழுங்கு செய்யும் பொறுப்பு திரு. தேவநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதும் அவர் தமிழன், தமிழர் பிரதிநிதி. ஆளுங் கட்சியைச் சேர்ந்த தமிழ் அமைச்சர் என்பதால் சங்கடநிலைக்குள்ளாகி வேதனைப் படுவதை பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார்.

கவலையுடன் ஒழுங்குகளை செய்த உள்நாட்டு அமைச்சர் இருதலைக் கொள்ளியுள் எறும்பு போல் வடக்கிலும் கிழக்கிலும் எவ்வித சுதந்திரமுமில்லாத நிலைகுறித்து தலைவர்களுக்கு அவசிய வேண்டுகோள் விடுத்ததும் தமிழர் அரசியலில் சந்தர்ப்பவாதம் இடம்பெறமுடியாதென்பதை வற்புறுத்துகின்றது.

அமைச்சர் தேவநாயகம் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேட்ட அங்கத்தவர். ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தலைமையில் நம்பிக்கை கொண்டு அமைச்சர் பதவியை ஏற்றவர்; எந்தச் சிக்கல்களிலும் ஆட்சிக்கு விசுவாசமாகவும், மக்களுக்குச் சேவைசெய்யும் உளப்பாங்கும் கொண்டவர்; அமைச்சர் அவையில் அத்தனைகய தமிழர்கள் இருப்பதால் சமாதான தீர்வுக்கு வழிபிறக்கலாமென்ற ஒரு நம்பிக்கை இல்லாமற் போகவில்லை

இன்று அமைச்சர் தேவநாயகம் மனந்திறந்து வெளிப்படுத்தும் கருத்தையே இன்னொரு சிரேட்ட தமிழ் அமைச்சர் திரு. தொண்டமான் தமக்குரித்தான தீரத்துடன் கூறியிருக்கிறார்

தமிழர்களின் கோட்டை யாழ்ப்பாணமே என்று கருதப்பட்டதால் மட்டக்களப்புத் தமிழர், மலையகத் தமிழர் என்ற பிரிவினை இருந்த காலத்தில் தமிழ் சமூகம் ஒன்றுபடாத பிணக்கு நிறைந்த அரசியல் கருத்துக்களுக்கு பலியாகி பலவீனப்பட்டிருந்தது

மலையகத் தமிழர்களின் அபிலாஷைகள் வேறுபட்டிருந்தபோதும், அவர்களும் இந்த நாட்டின் தேசிய இனமென்ற கருத்து இன்றைய சூழ்நிலையில் பலமடைந்திருக்கிறது

இன்று தமிழர் பிரச்னைக்கு மட்டக்களப்பும் மலையகமும் அமைச்சு மட்டத்தில் ஆதரவுமட்டுமல்ல தெளிவான குரலெழுப்ப முடிந்தது தமிழர்களின் வாழ்வு அபாயத்தின் விளிம்பைத் தொட்டதின் விளைவு.

போராடும் தமிழர்களைச் சுட்டுத் தள்ளவில்லையே என்ற கண்டனம் தெரிவித்த அமைச்சர் வெளியேற்றப்பட்டதும், இரு சிரேஷ்ட தமிழ் அமைச்சர்கள் பிரச்னைக்கு சமாதான தீர்வு காணவேண்டுமென்பதை வற்புறுத்தியிருப்பதும், ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சக அமைச்சர்களின் கண்கள் திறப்பதற்கு உதவவேண்டும். கடந்த கால அரசியல் கபடம் கைகூடாதென்பதை உணர்ந்தே ஆகவேண்டும்.

பிரிவினைவாதம் பயங்கரவாதம் என்ற கோஷம் பிரசாரம் தொடருமானால் எதனை எப்போது எவ்வாறு செய்து நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற அரசியல் ஞானம் ஆட்சிக்கு அற்றே போய்விடும்.

வடக்கில் ஏற்பட்ட குழப்பம் இது; இதனை அடக்கி ஒடுக்கி விடுவதே அவசர பொறுப்பு என்றோ, பிரிவினை இயக்கத்தால் நாட்டின் இறைமைக்கு ஆபத்து என்று மக்கள் படையைத் திரட்ட முயல்வதோ ஆட்சிக்கு எவ்வித ஸ்திரமும் அளிக்காது.

பகைமையை ஒழிக்க, சமாதான முடிவுக்கு எவ்வகையிலும் முயன்று வெற்றி காண்பதே பல கற்பனைக் கெட்டாத தோல்விகளையும் துன்பங்களையும் தடுக்கும் வழி.

### யாழ்.ரயில்...

[1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி]

நேற்றுக்காலை பத்தரை மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது. சைக்கிள்களில் வந்த மூன்று இளைஞர்கள் புகையிரதநிலையத்தின் வாயில் முகப்பில் கட்டப்பட்டிருந்த தேசியக் கொடியைக் கழற்றிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. அக் கொடியைப் பாதுகாக்க இருவர் நின்றிருந்தபோதிலும் அவர்கள் துரத்தப்பட்டபின்னரே அது கழற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## இருவாரங்களில் தொடர்பு

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி. இராமச்சந்திரன் இன்னும் இருவாரத்தில் பொதுமக்களுடன் தாம் தொடர்பு கொள்ளப் போவதாக நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று தமக்களிக்கப்பட்ட வரவேற்பையடுத்தே அவர் இதனை சைகை மூலமாக அறிவித்தார். [கி]

### சுதந்திரதினம்...

[1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]]

வுக்கு மட்டும் தேசியக்கொடி அஞ்சலிக்குச்சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் கொழும்பு திரும்பிய சுமார் 100பேர் கொண்ட இராணுவ அணிக்கே இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இராணுவ வீரர்களும், அவர்களது சாதனங்களும் நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதியில் பெருமளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆகையினாலேயே இத்தடவை இராணுவ அணிவகுப்புகள் இடம் பெறவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கே இத்தடவை அதிமுக்கியமளிக்கப்பட்டது (கி)

### மட்டக்களப்பில்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

சுதந்திர தினத்தையொட்டி மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்த 20 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

### ஆஸ்பத்திரிக்கு...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

தம் கேட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வீதியோரத்திலும், அருகிலிருந்த புத்தகசாலைப் படியிலும், கிடந்ததாகவும் பின்னர் ஆஸ்பத்திரியிலிருந்து 2 தள்ளுவண்டில் கொண்டுவரப்பட்டு அவற்றில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### குழந்தை பிறந்தது

காயமடைந்த விஜயலெட்சுமிக்கு நேற்று அதிகாலை 5-05 மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. விஜயலெட்சுமியின் கால் பெருவிரலில் குண்டுபாய்ந்துள்ளது. காயமடைந்த மணியத்தின் வயிற்றிலும், காலிலும் குண்டு பாய்ந்திருந்தது. சண்முகத்திற்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது, இருவருக்கும் சத்திரசிகிச்சை செய்து குண்டுகள் எடுக்கப்பட்டன.

### நள்ளிரவில் பிரசவ வேதனை

நள்ளிரவு பிரசவ வேதனை ஏற்பட்டதைதொடர்ந்து கர்ப்பிணியை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல கார் சாரதி சம்மதித்ததாகவும், வெள்ளைக் கொடிகட்டிக்கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது. (க)

## உத்தரவு மீறப்பட்டதாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஊரடங்கு நேரத்தில் சிலர் சென்று கொண்டிருந்த கார் ஒன்றை நிறுத்தும்படி விடுக்கப்பட்ட உத்தரவை மீறி அக்கார் சென்றதால் ஆயுதப்படையினர் சுட்டதாகவும், அதன்காரணமாக கார் சாரதி ஸ்தலத்தில் மரணமானதுடன் மற்றும் மூவர் காயமுற்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விசாரணை நடத்த ஆலால் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'அவசர சிகிச்சைக்காக சென்ற சர்ப்பிணி பெண் சுடப்பட்டு, அவருடன் சென்ற மற்றொருவர் துப்பாக்கி சூடடுக்குப் பலியாகி மற்றும் இருவர் காயமடைந்தது மனித அடிப்படை உரிமைகளை மீறுவதாகும்'

தமிழர் விடுதலை கூட்டணி நிர்வாக செயலாளர் திரு எம். ஆலால சுந்தரம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (க)

## புதிய தமிழக சட்டசபை: வியாழக்கிழமை எம். ஜி. ஆர். முடிவு எடுப்பார்

(சென்னை)

தமிழக அரசின் புதிய சட்டசபையை அமைப்பது குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை திரு. எம். ஜி இராமச்சந்திரன் முடிவு எடுப்பார் என்று தெரியவருகிறது.

திரு. இராமச்சந்திரன் நேற்று தமிழக ஆளுநர் திரு. எஸ் எல். குரானாவை 20 நிமிட நேரம் சந்தித்து உரையாடினார். இவ்வுரையாடலின் போதே புதிய சட்டசபை அமைப்பது பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டதாகக் கூறப்பட்டது.

திரு. இராமச்சந்திரனின் மனநிலை, உடல்நிலை ஆகியன திருப்திகரமாக உள்ளன என்று திரு குரானா தெரிவித்தார்.

இதேவேளை திரு. இராமச்சந்திரனுக்கு பறங்கிமலை இராணுவத் திடலில் நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழகத்தின் பலபாகங்களிலுமிருந்துலட்சக் கணக்கானவர்கள் இவ்வரவேற்பில் கலந்து கொண்டனர் (வெ)

## பத்தாயிரம் வெகுமதி

(புதுடில்லி)

இந்திய கிரிகெட் அணியின் இளம்துடுப்படி வீரர் மொஹமட் அசருதீனுக்கு உத்தரப் பிரதேஷ் மாநில அரசு பத்தாயிரம் ரூபா வழங்கிப் பாராட்டியுள்ளது.

அசருதீன் தொடர்ச்சியாக மூன்று டெஸ்ட் 'செஞ்சரி' களைப் பெற்று உலக சாதனை படைத்திருந்தார். இதனைப் பாராட்டியே நேற்று கான்பூரில் இவ்வெகுமதி அவருக்கு வழங்கப்பட்டது. (கி)

## ஆண்டு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

கருகம்பனை ஸ்ரீ நாகராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் திருப்பணிச்சபை ஆண்டு நிறைவுவிழா இன்று நடைபெறவுள்ளது.

ஆண்டு நிறைவையொட்டி புதியபாதை திருத்தலும், பௌர்னமி விழாவும் இடம் பெறும்.

## தேசியக்கொடி அபகரிப்பு

[கல்முனை]

கல்முனையிலுள்ள சுமார் பத்து அரசாங்கத் திணைக்களங்களில் கட்டப்பட்டிருந்த தேசியக்கொடிகள் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் அபகரித்துச் செல்லப் பட்டுள்ளன.

கல்முனை நீதிமன்றம், தபாலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், தொலைத்தொடர்புத் திணைக்களம், வங்கி. இ. போ. ச. உட்பட 10-க்கும் அதிகமான திணைக்களங்களில் கட்டப்பட்டிருந்த தேசியக் கொடிகளே நேற்றுக் காலை காவலாளிகளைப் பயமுறுத்தி, அறுத்துச் செல்லப் பட்டன.

### மட்டக்களப்பில்...

மட்டக்களப்பில் வங்கி உட்பட சில திணைக்களங்களில் தேசியக்கொடிகள் நேற்று அபகரித்துச் செல்லப்பட்டன.


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை செல்லத்துரை

(உரும்பராய்)

உரும்பராய் தெற்கு சிவகுல வீதி கணபதிப்பிள்ளை செல்லத்துரை காலமானார் இவர் பூபதி சிவசுப்பிரமணியம். சரஸ்வதி ஜெகதீ வரன், செ. கனகேந்திரம் (ஆசிரியர் கிளிநொச்சி மகாவித்தியாலயம்), செ சிவலிங்கம் (பிரதம பொறியியலாளர் நைஜீரியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், த. சிவசுப்பிரமணியம் (மணியம், லங்கா சிமெந்து ஏக விநியோகஸ்தர் கோண்டாவில்), நா. ஜெகதீஸ்வரன் (அரசபட வரைஞர் அதிகாரி, மட்டக்களப்பு), கனகேந்திரம் பரமேஸ்வரி, சிவலிங்கம் கிரிஜா என்போரின் ஆசை மாமனாரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-2-85 செவ்வாய்க்கிழமை இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றனர்

செய்தி: பொ. நாகரத்தினம் (ஆசிரியர்)
1695



## மரண அறிவித்தல்

### இராமசாமி (டிறைவர்)

யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியைச் சேர்ந்த N. இராமசாமி அகாலமரணமானார் அன்னார் ஞானம்மாளின் அன்புக்கணவரும் வசந்தா, இலங்கேஸ்வரி, கண்ணன், பாலன், பஞ்சவர்ணம், நாராயணசாமி, நாகேஸ்வரி (இந்தியா) வேணுகோபால், பாஸ்கரன், நரேந்திரன். இராஜேஸ்வரி. கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற அழகர்சாமி (இந்தியா வெள்ளைச்சாமி செங்கலடி, ஆகியோரின் சகோதரரும் K துரைராஜ் (இந்தியா), பவுண்ராஜ். பாண்டியராஜ், ராஜாராம் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் நவநீதராஜ், கண்ணன், குணசேகரன் சங்கரையா (இந்தியா), சரஸ்வதி, சீதாலட்சுமி, பஞ்சவர்ணம். சாந்தி ஆகியோரின் மாமனாரும் என். பாலகிருஷ்ணன், என் லெட்சுமி என் விஜயபாலன், என். நாகரஞ்சினி, என். ராஜசேகரன், என். சுரேகா, என். கஜன், ஆர் சரவணகுமார், ஆர் குமுதநாயகி, ஆர். வனிதா, ஆர். தயாமாலினி, கே சசிகுமார், கே சாரதா, கே ரூபன் கே சுஜேந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 6-2-85 புதன்கிழமை மு ப 10-00 மணியளவில் இல: 9 காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம். 1696


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.